# சொன்னால் முடிந்திடுமோ ?

அகிலத்தின் அருட்கொடை, இறைத்தூதர்களின் இறுதி முத்திரை, நவீன உலக வரலாற்றின் புரட்சி நாயகர், மனித உரிமைகளின் மீட்பர், மனித சமத்துவ சகோதரத்துவச் சிற்பி, அனைத்துலக மாந்தருக்கும் அழகிய முன்மாதிரி, மனிதருள் மாணிக்கம்... என இவைபோன்ற இன்னும் ஏராளமான பட்டங்கள் அவருக்கு உண்டு. ஆயினும் இவை அனைத்துமே அவரது புகழை முழுமையாக எடுத்தோத வலிமையற்றவையே!

- இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் உலகின் கால்வாசிக்கும் அதிகமான மக்கள் அந்த மாமனிதரைக் கண்ணால் காணாமலேயே அவரை நேசித்து அவரைத் தங்கள் வாழ்வியல் வழிகாட்டியாக எடுத்துக்கொண்டு பின்பற்றுகிறார்கள். கடந்த பதினான்கு நூற்றாண்டுகளில் அவரை அவ்வாறு பின்பற்றி மறைந்தோர் பலகோடி.
- பரந்த உலகில் விரிந்து கிடக்கிற மனித வரலாற்றில் அவர் ஏற்படுத்திய தாக்கம் கற்பனைக்கு அப்பாற்பட்டது. இந்த உலகில் மனிதராகப் பிறந்த அல்லது இனி பிறக்கப் போகிற வேறு எந்த சக்தியும் எட்டிப் பிடிக்க முடியாதது.

- சமயம், சமூகம், அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், வரலாறு, அறிவியல், மொழி, தத்துவம், இலக்கணம், இலக்கியம், வாழ்வியல், உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் அவருக்கு தீர்க்கமான ஒரு இடம் இருக்கிறது. இன்றும் நபிமருத்துவம் என்பது மக்களின் பிணி தீர்க்கும் ஒரு முறையாக இடம்பிடித்திருக்கிறது என்பது மட்டுமல்ல மனித உடல் ஆரோக்கியத்திற்கான அவருடைய வழிகாட்டுதல்கள் அனைத்து மருத்துவத்துறையிலும் மேற்கோள் காட்டப்படுபடுகின்றன. சட்டம், நீதி, நிர்வாகம் மற்றும் பதிவுத்துறைகளும் அவர் கோலோச்சுகிற துறைகளாகும்.

- தான் உருக்கொடுத்த அத்தனை சிந்தனைகளையும் வழிவழியாக பின்பற்றி நடக்கும் ஒரு சமூகத்தை உருவாக்கிச் சென்றார் அந்த மகான். அந்த சமூகம் இன்றளவும் மட்டுமல்ல இனி உலகம் வாழும் காலம் வரையும் அவரது சிந்தனைகளை ஆலோசனைகளை உத்தரவுகளாக தலைமேற் கொண்டு செயல்படக் காத்திருக்கிறது. அவர் மறைந்து இன்றும் அவரைப் பற்றியும் அவர் விட்டுச் சென்ற தத்துவங்கள் நடைமுறைகள் குறித்தும் பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் சமூக வலைதளங்களும் தொடர்ந்து விவாதித்துக்கொண்டிருப்பதை அனைவரும் அறிவோம்.
- அவருக்கும் உலகம் கொண்டாடும் மற்ற தலைவர்களுக்கும் இடையே மிக முக்கியமான ஒரு வித்தியாசம் இருக்கிறது. இயேசு. புத்தர், ஆதி சங்கரர் விவேகானந்தர், காந்தி, போன்ற பலரும் அனைத்து மக்களாலும் பாராட்டப்படுகிறவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவர்கள் இன்றைய நவ நாகரீகத்தின் அழுத்தத்தை தாண்டி இவர்களை பின்பற்றுகிற ஆட்கள் உண்டா என்பதும் அப்படியே இருந்தாலும் அவர்களின் சதவீதம் எத்தனை என்பதும் கேளிவிக்குரியதாகும். முஹம்மது நபி (ஸல்) பாராட்டப்படுகிறவராக மட்டுமில்லாது இன்றளவும் கண்டங்கள் அத்தனையிலும் பின்பற்றப்படுகிறார் என்பதைக் கூர்ந்து யோசிக்க வேண்டும்.

# சான்றுபகரும் சரித்திர ஆய்வாளர்களும் மேற்குலக மேதைகளும்

மனித வரலாற்றின் போக்கில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணும் அளவுக்கு மிகப்பெரும் செல்வாக்கு வல்லமை பெற்றிருந்தவர்கள் யார் யார் என்பதை மைக்கேல் ஹெச். ஹார்ட் அவர்கள் ““வுாந 100““ என்ற தன்னுடைய புத்தகத்தில் வரிசைப்படுத்திப் பதிவு செய்திருக்கிறார். அதில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முதலாம் இடத்தை கொடுத்து அதற்கான காரணத்தையும் கூறுகிறார்:

இந்த உலகத்தில் அளப்பரிய செல்வாக்குடன் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியவர்களின் பட்டியலில் முஹம்மது அவர்களை முதலாமானவராகத் தேர்ந்தெடுத்தது வாசகர்களில் சிலருக்கு வியப்பாக இருக்கும். மற்றும் சிலர் ”ஏன் அப்படி?” என்று வினாவும் தொடுக்கலாம். ஆனால் சமயம், உலகியல் ஆகிய இரு நிலைகளிலும் ஒரு சேர மகத்தான வெற்றி பெற்றவர், வரலாற்றில் அவர் ஒருவர் மட்டுமே!

எளிமையான வாழ்க்கைப் படியில் துவங்கிய அன்றைய உலகத்தின் பெரும் மதங்களின் ஒன்றை நிறுவி, அதனைப் பரப்பிய பேராற்றல் வாய்ந்த அரசியல் தலைவருமாவார்கள். அவர்கள் உயிர் நீத்து பதின்மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அவர்களின் தாக்கம் சக்தி மிக்கதும், எல்லாத் துறைகளிலும் பரவி நிற்பதுமாக இன்றும் விளங்குகிறது.

இந்நூலில் இடம் பெற்றுள்ளோரில் பெரும்பான்மையானவர்கள் பண்பாடு மிக்க அல்லது அரசியலில் நடுநாயகமாக விளங்கிய நாகரிகத்தின் கேத்திரங்களில் பிறந்து வளர்வதற்குரிய வாய்ப்பினைப் பெற்றவர்களாக இருந்தார்கள். ஆனால், முஹம்மதோ (ஸல்) வாணிபம், கலை, கல்வி ஆகியவற்றின் கேத்திரங்களுக்குத் தொலைவிலுள்ளதும், அக்காலத்தில் உலகத்தின் பின்தங்கிய பகுதிகளாகவும் இருந்த தென் அரேபிய நாட்டிலுள்ள மக்கா என்னும் பேரூரில் கி.பி. 570ஆம் ஆண்டில் பிறந்தார்கள். ஆறு வயதிலேயே அநாதையாகிவிட்ட அவர்கள், எளிய சூழ்நிலையிலே வளர்க்கப்பட்டார்கள்.

அன்னார் எழுதப் படிக்கத் தெரியாதவராக இருந்தார் என இஸ்லாமிய வரலாறு நமக்குச் சொல்லுகிறது. தம் இருபத்தைந்தாம் வயதில் அவர்கள் செல்வச் சீமாட்டியாக இருந்த ஒரு விதவையை மணந்தார்கள். அதிலிருந்து அவர்களின் பொருளாதார நிலை சீரடைந்தது. எனினும், அவர்கள் தம் நாற்பதாம் வயதை எட்டும் முன்னர், குறிப்பிடத்தக்கவர்கள் என்பதற்குரிய வெளி அடையாளங்கள் மிகக் குறைவாகவே இருந்தன.

- மைக்கேல் எச். ஹார்ட்

### விந்தைகளின் பிறப்பிடம் நபிகளார்

● அவர் தமது மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்தது வியப்புக்குரியதல்ல மாறாக அது என்றும் நீடித்து நிலைத்திருக்கும் பாங்குதான் வியப்புக்குரிய ஒன்றாகும். மக்கா நகரிலும் மதீனா நகரிலும் அவர் வடித்தளித்த இஸ்லாத்தின் அதே அசல்வடிவம் தூய்மை கெடாமல் மாற்றப்படாமல் திரிக்கப்படாமல் பன்னிரண்டு நூற்றாண்டுகளில் நடந்தேறிய புரட்சிகள் பலவற்றிற்குப் பின்னரும் இன்று வரை இந்திய ஆப்ரிக்க துருக்கியப் பகுதிகளில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றது. சமயத்தைக் குறித்து கற்பனை மற்றும் ஊகத்தின் அடிப்படையிலான கருத்தோட்டங்களிலிருந்து முஹம்மதியர்கள் ஒதுங்கியே

**● மக்களின் துன்பப்படுவது கண்டு வருந்துபவர்**

*9:128* (இறை விசுவாசிகளே!) நிச்சயமாக உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார் நீங்கள் துன்பத்திற்குள்ளாகி விட்டால், அது அவருக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கின்றது அன்றி, உங்(கள் நன்மை)களையே அவர் பெரிதும் விரும்புகிறார் இன்னும் இறைநம்பிக்கையாளர்கள் மீது மிக்க கருணையும் கிருபையும் உடையவராக இருக்கின்றார்.

**● திருந்தாத மக்களுக்காக அதிகம் வருந்தியவர்**

*18:6* (நபியே!) இந்த (வேத) அறிவிப்பில் அவர்கள் நம்பிக்கை கொள்ளாவிட்டால், அவர்களுக்காக வியாகூலப்பட்டு, நீர் உம்மையே அழித்துக் கொள்வீர்கள் போலும்!

*26:3* (நபியே!) அவர்கள் இறைநம்பிக்கையாளர்கள் ஆகாமல் இருப்பதற்காக (துக்கத்தால்) உம்மை நீரே அழித்துக்கொண்வீர் போலும்!

**● இறை நேசத்திற்கும் பாவ மன்னிப்புக்கும் வழியாக இருப்பவர்**

*3:31* (நபியே!) நீர் கூறும் ““நீங்கள் இறைவனை நேசிப்பீர்களானால், என்னைப் பின்பற்றுங்கள். இறைவன் உங்களை நேசிப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான் மேலும், இறைவன் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான்.

*4:80* எவர் (இறைவனின்) தூதருக்குக் கீழ்படிகிறாரோ, அவர் இறைவனுக்குக் கீழ்படிகிறார். யாராவது ஒருவர் (இவ்வாறு கீழ்படிவதை) நிராகரித்தால் (நீர் வருந்த வேண்டியதில்லை, ஏனெனில்) நாம் உம்மை அவர்களின் மேல் கண்காணிப்பவராக அனுப்பவில்லை.

# (ஸல்) (அலை) (ரலி) (ரஹ்) - அர்த்தம்?

● (ஸல்) என்பது ஸல்லல்லாஹு அலைஹி லஸல்லம் என்பதன் சுருக்கமாகும். அவர் மீது அல்லாஹ் சிறப்பருள் புரியட்டும். சாந்தியை வழங்கட்டும் என்பது இதன் பொருள்.

ஒவ்வொரு சமுதாயமும் தங்களுக்கு வழிகாட்ட அனுப்பப்பட்ட நபிமார்களைக் கடவுளர்களாக ஆக்கி விட்ட நிலையில் முஸ்லிம்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைக் கடவுளாக ஆக்காமல் இந்த அடைமொழித் தடுத்து வருகிறது.

● (அலை) என்பது “அலைஹிஸ்ஸலாம்” அல்லது “அலை ஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம்” என்பதன் சுருக்கமாகும். நபிகள் நாயகம்(ஸல்) தவிர மற்ற நபிமார்களைப் பற்றிக் கூறும் போது இவ்வாறு பயன்படுத்தி வருவது வழக்கமாகவுள்ளது. அவர் மீது இறைவனின் சிறப்பருளும் சாந்தியும் ஏற்படட்டுமாக என்பது இதன் பொருள். அதாவது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பதற்கு என்ன பொருளோ அதே பொருள் தான் அலை ஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் என்பதற்கும் பொருளாகும்.

● (ரலி) என்பது ரலியல்லாஹு அன்ஹு என்பதன் சுருக்கமாகும். அவரை ‘அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக’ என்பது இதன் பொருள். இதை நபித்தோழர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

● (ரஹ்) என்பது ரஹ்மத்தல்லாஹி அலைஹி என்பதன் சுருக்கம் அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக என்பது. நடைமுறையில் இறந்தவர்களில் பிரபலமானவர்களுக்கு இது பயன்படுத்தப்படுகிறது..

